**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின்உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின்

அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின்செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி இருக்காமை

| உரிய கணக்கீட்டு நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 22 பிரகாரம் நிதியேற்பாடுகள் அடையாளப்படுத்துவதற்காக தேவைப்படுகின்ற எந்தவொரு நிபந்தனைகளும் பூர்த்தி செய்திராத சந்தர்ப்பத்தில் பயிற்சி, கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு, நலன்புரி மற்றும் பாராட்டத்தக்க செயற்பாடுகளுக்காக நடப்பு ஆண்டில் ரூபா 200,000 ஆன தொகை ஒதுக்கப்பட்டமை மற்றும் கடந்த ஆண்டில் ரூபா மேற்படி விடயத்திற்காக ரூபா 200,000 ஆன தொகை ஒதுக்கப்பட்டமை காரணத்தினால் ஆண்டின் மிகை | குறித்த பயிற்சி, கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு, நலன்புரி மற்றும் பாராட்டத்தக்க செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை நாட்டில் காணப்பட்ட நிலையின் காரணத்தினால் செலவழியாத போதிலும் எதிர்காலத்தில் ஊழியர் நலன்புரிக்காக செலவு செய்வதற்கு ஏற்படுகின்றமையினால் மற்றும் அந் நடவடிக்கைக்காக வருடாந்தம் ஒதுக்கப்படுவது சிறிய தொகை என்பதனால் தற்போதுள்ள செலவினத்துடன் ஒப்பிடும் போது அது போதுமானதாக இல்லாமையினாலும் சில ஆண்டுகளுக்குரிய ஒதுக்கங்களின் கூட்டுத்தொகைக்கு சமமான தொகையொன்று வரும் நாளொன்றில் ஏற்பதற்கு நேருகின்றமையினால் மற்றும் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 200,000 இனால் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்ததுடன் நடைமுறை பொறுப்பு ரூபா 400,000 இனால் மிகையாக மதிப்பிடப்பட்டிருந்தது. | அத் தொகை குறிப்பானதென்பதனால் வருடாந்தம் ஒதுக்கமாக கணக்கிடுவதற்கு ஆளுகை சபையினால் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அ) நடப்பு ஆண்டிற்குரிய செலவினம் மட்டும் ஆண்டின் வருமானத்திற்கு எதிராக இணக்கப்பட வேண்டிய போதிலும் கணக்கீட்டு உருவகத்தினால் ஏற்கப்பட வேண்டிய அல்லது ஏற்கப்படுவதற்கு கடப்பாடொன்று இன்றி ரூபா 278,547 ஆன கிரயம் நிர்வாகச் செலவீனமாக நிதிச் செயலாற்றல் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிர்வாகச் செலவீனம், ஒதுக்க கணக்கொன்றாக பேணிச் செல்வதற்கு ஆளுகை சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் மொத்த தொகையும் செலவீனமாக நிதி செயலாற்றல் கூற்றினுள் உள்ளடக்கப்படடுள்ளது. | அட்டுறு கோட்பாட்டின் பிரகாரம் ஆண்டிற்குரிய செலவினங்கள் உரிய வகையில் அடையாளப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |
| ஆ) கடந்த ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 256,784 ஆன நிர்வாகச் செலவீனம் மிகை ஒதுக்க திரண்ட நிதிக்கு சீராக்கம் செய்யாது நடப்பு ஆண்டின் வருமானத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. | நிர்வாகச் செலவீனம், ஒதுக்க கணக்கின் செலவீனம் செலுத்திய பின்னர் எஞ்சிய மீதி ஆளுகை சபையின் தீர்மானத்தின் பிரகாரம் இறுதி காலாண்டின் ஊக்குவிப்பு கொடுப்பனவிற்கு சேர்க்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவீனம் சரியாக நிதிக்கூற்றினுள் இனங்காணப்படல் வேண்டும். |
| இ) 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன (வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) கட்டளை இல 3 (2) பிரகாரம் ஒட்டுமொத்த வருமானத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய 5 சதவீதத்திற்குரிய ரூபா 3,378,195 ஆன பெறுமானம் நிதிக் கூற்றினுள் செலவீனமாக குறிக்கப்பட்டமையின் காரணத்தினால் காலப்பகுதியின் மிகை அப் பெறுமானத்தினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன (வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) கட்டளை இல 3 (2) பிரகாரம் 5% ஆன தொகை ஒதுக்கமாக நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காலப்பகுதிக்குரிய மிகையில் நிறுத்தி வைத்தல்கள் உரிமை மாற்றல்கள் கூற்றில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ஈ) நிதியத்தின் நிலையான கணக்குகள் மூன்றிற்குரியதாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வங்கியினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் வைப்பு மீதி ரூபா 75,575,622 ஆனதெனிலும் நிதிக் கூற்றில் நிலையான வைப்பு என ரூபா 77,259,016 ஆன தொகை குறிப்பிடப்பட்டிருந்தமையினால் நிலையான வைப்பு மீதி ரூபா 1,683,394 இனால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசு ரீதியின் அடிப்படையில் வட்டி இறுதி கணக்கில் உள்ளடக்கப்பட முடியாமையினால், நிலையான வைப்பு வட்டி அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டு இறுதி கணக்கு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுகக்ப்பட்டுள்ளது. | மூல ஆவணத்தின் அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்கள் சரியாக இனங்காண்பதற்குநடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்களின் விபரம | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆளுகை சபைக்காக கொடுப்பனவு செய்வதற்கு தொடர்புயதாக வெளியிடப்பட்டுள்ள பீ.ஈ.பீ/3/2015 ஆம் இலக்க 2015 யூன் 17 திகதிய திறைச்சேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் ஆளுகை சபைக்கு கொடுப்பனவு செலுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் காணப்படாதிருக்கையில், முறையான அங்கீகாரமின்றி நிதியத்தின் ஆளுகை சபைக்காக மொத்தம் ரூபா 114,000 ஆன கொடுப்பனவொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்து. | மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் 213 (இ) பிரிவின் கீழ் ஊக்குவிப்பு வருமானத்தில் 1% நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவீனமாக ஒதுக்கப்பட்டுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு பெற்றுக் கொடுக்கும் ஆளுகை சபை அங்கத்தவர்களுக்கு இந்த கொடுப்பனவானது, ஆளுகை சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 I பிரிவின் 15.1 ஆம் பந்தியின் கீழ் அறிமுகப்படுத்தியுள்ள நிதி பிரமாணம் 877 (2) (இ) 02 ஆம் வழிக்காட்டி 01 ஆம் உப பந்தி | பிரகாரம் சட்டரீதியான நிதியமொன்றின் அனைத்து பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் முறையே மூல ஆவணத்தினை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான பயன்பாட்டு பேரேட்டு புத்தகங்களில் மற்றும் பேரேட்டு கணக்குகளில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்திற்கு தொடர்படையதாக முறையாக நாளேட்டு குறிப்புக்கள் மற்றும் பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 I பிரிவின் 15.1 ஆம் பந்தியின் கீழான நிதி பிரமாணம் 877 (2) இன் (இ) வழிக்காட்டி 02 உப பந்தி 01 மற்றும் நி.பி 445 பிரகாரம் மற்றும் நிதியத்தின் தன்மை மற்றும் தேவைப்பாட்டின் பிரகாரம் தேவைப்படுகின்ற பயன்பாட்டு பேரேடு, காசுப் புத்தகம், பொது பேரேடு, நாளேட்டு குறிப்புக்கள், முதலீட்டு பதிவேடு, பெறுவனவு பதிவேடு, கொடுப்பனவு பதிவேடு போன்ற பேணிச் செல்லப்படுகின்றதென தெரிவிக்கின்றேன். | அரச நிதி சுற்றறிக்கைகளுக்கு அமைவாக முறையான மூல ஆவணங்களின் அடிப்படையில் பொருத்தமான பயன்பாட்டு பேரேட்டு புத்தகங்களில் மற்றும் பேரேட்டு கணக்குகளில் கொடுக்கல் வாங்கல்களை குறித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 12,043,191 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,946,579 ஆக காணப்பட்டது. ஆதன் பிரகாரம், நிதி விளைவுகளில் ரூபா 9,096,612 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் கடந்த ஆண்டிற்கு இணையாக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 9,444,464 இனால் அதிகரித்தமை இதற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அ) 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன (வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) கட்டளை தொகுப்பில் 03 (1) ஆம் கட்டளை பிரகாரம் மோட்டார் வாகனங்கள் தொடர்பான முறைக்கேடுகள் மேற்கொள்ளும் நபர்கள் தொடர்பாக மோட்டார் வாகனங்கள் போக்குவரத்து ஆனையாளருக்கு தகவல்கள் வழங்கும் மற்றும் பிறழ் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் இனங்கானும்/ பிறழ் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் நபர்களுக்காக வெகுமதிகளை கொடுப்பனவு செய்யும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மோட்டார் வாகனங்கள் தொடர்பான முறைக்கேடுகள், துஷ்பிரயோகங்கள், முறையாக பயன்படுத்தாமை தொடர்பான தகவல்களை வழங்குவதற்கான முறைமைகள் தாபிப்பதற்கு, அது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவுரை வழங்குவதற்கு மற்றும் வெகுமதி முறைமை தொடர்பான தகவல்கள் பொதுமக்களுக்கு தெரிவிப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகனங்கள் தொடர்பான முறைக்கேடுகள் தொடர்பாக திணைக்களத்தின் புலனாய்வு பிரிவிற்கு புகாரளிக்கும் முறைமையொன்று காணப்படுகின்றதுடன் அவ்வாறு ஏதும் முறைகேடினை வழங்கும் நபருக்கு பணம் செலுத்துதல் தொடர்பாக மோட்டார் வாகனங்கள் (வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) கட்டளை இல 3 (1) ‘‘அ’’ பிரகாரம் போதுமான ஏற்பாடுகள் உள்ளது. | நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தாயரிப்பதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| ஆ) மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் 213 ஈ (2) பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்படுகின்ற நீதிமன்ற வழக்குகளின் கீழ் அறவிடப்படுகின்ற அபராத்தில் அரை பங்கு மற்றும் மோட்டார் | அவ்வாறான காசு பெறுவனவொன்று நேரிட்டதெனில் திணைக்களத்தின் சட்ட பிரிவின் ஊடாக மற்றும் சுங்க திணைக்களத்தின் ஊடாக வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் முகாமைத்துவத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இது வரையில் அவ்வாறு | மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் 213 ஈ (2) பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்படுகின்ற |

| | | |
|---|---|---|
| வாகன போக்குவரத்து சட்டத்தின் 213 (உ) பிரிவின் கீழ் அல்லது சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது வேறு எழுத்துமூல சட்டத்தின் கீழ் செலுத்துவதற்குள்ள தொகை வெகுமதி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும் மேற்படி மூலமொன்றின் ஊடாக எந்தவொரு வருமானமும் நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் அவ் மூலங்களிலிருந்து நிதியத்திற்கு பணம் அறவிடுவதற்கு நிதியத்தின் முகாமைத்துவத்தினால் எந்தவொரு வேலைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற வழக்குகளின் கீழ் அறவிடப்படுகின்ற அபராதம், சுங்க அபராதம் மற்றும் அறவிடல்கள் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு முறைமையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் 12 கணக்கு விடயங்களுக்குரிய பாதிடப்பட்ட பெறுமதிகள் மற்றும் உள்ளவாரான பெறுமதிகள் இடையே 24 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையில் வேறுபாடுகள் காண்பிக்கப்பட்டமையினால் பாதீடானது பயனுறுதிமிக்க நிதி கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | வாகன இறக்குமதி இடைநிறுத்தப்படல், நாட்டினுள் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி, வட்டி வீதங்கள் அதிகரித்தமை காரணத்தினால் வாகனங்கள் கையளித்தல் போன்றன குறைந்தமை காரணத்தினால் வருமானம் குறைந்தமை மற்றும் நாட்டினுள் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணத்தினால் செலவீனத்தினைக் கட்டுப்படுத்தல். | யதார்த்தமாக பாதீட்டு ஒதுக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |